**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.10/2017**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : விஜயராகவலு | மதம் | : இந்து |
| த/பெ | : லோகநாதன் | ஜாதி | : -- |
| வயது | : 43 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் : | தனியார் தொழில் | வட்டம் | : திருத்தணி |

**26.03.2025**
**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்தின் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் இந்த வழக்கில் எத்தனையாவது பிரதிவாதி என்றால் 1ம் பிரதிவாதி. நான் என் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியும். நான் 1, 2 மற்றும் 5ம் பிரதிவாதிக்காகவும் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

2. 2 மற்றும் 5 பிரதிவாதிகளுக்காக நான் பிரமாண வாக்குமூலம் அளிக்க 2, 5 பிரதிவாதிகளிடன் எனக்கு எழுத்துமூலமாக ஏதேனும் அனுமதி அளித்துள்ளார்களா என்றால் இல்லை. நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்களை நிரூபிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்களை நிரூபிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாததால் எனது பிரமாண வாக்குமூலம் செல்லாது என்றால் நான் ஆவணம் கொடுத்துள்ளேன்.

3. வாதிகளின் வழக்கு பொய் என்பதை நிரூபிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது கூடுதல் எதிர்வழக்குரையின் 3ம் பத்தியில் வரி 12ல் "The Defendants used the alleged house site more than statutory period and they are having easement right even the alleged house site purchased by the Plaintiff" என

சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து வாதி கிரையம் பெற்ற சொத்து என்பதை நாங்கள் மேற்காண்டவாறு ஒப்புக்கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல. வாதி வீடு கட்டும்போது தகராறு செய்து தவறான வார்த்தைகள் பேசி அவரை கட்டவிடாமல் பிரச்சனை செய்தோம் என்றால் இல்லை. வாதியின் சொத்தாக இருந்தாலும் சட்டக்காலத்திற்கு மேலாக நாங்கள் பயன்படுத்தி வருவதாக நாங்கள் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளோம் என்றால் வாதி வீடு கட்டுவதற்காக முடிவு செய்து வந்தார். நாங்கள் அனைவரும் சேர்ந்து அது போக வர வழி என்று கூறி அதை நிறுத்தி வைத்துவிட்டோம்.

4. வாதியின் சொத்தான வழக்கு சொத்து திருத்தணி நகராட்சி சாலையாக இருப்பதாக நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருப்பதற்கு ஆதரவாக நான் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. ஆனால் நகராட்சியில் சென்று அந்த இடத்தை பாதையாக நாங்கள் பயன்படுத்துவதாக சொன்னோம். அ.வ.எண்.3/2000 வழக்கு பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த வழக்கை பற்றி சொல்ல முடியுமா என்றால் ஏற்கனவே வழக்கு நடந்தது. அதில் நான் தலையிடவில்லை. மீனாட்சி, ஜெயம்மாள், பக்தவச்சல நாயுடு, ராஜா மற்றொருவர் பெயர் ஞாபகமில்லை ஆகிய எங்கள் தெருவில் இருப்பவர்கள் சேர்ந்து வாதி மகேஷின் அப்பா மீது வழக்கு தாக்கல் செய்தார்கள்.

5. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 4 தீர்ப்பாணையில் வாதியாக மகேஷ் குமார்தான் உள்ளார் என்றால் சரிதான். அதில் பிரதிவாதிகள் 5 நபர்கள் என்றால் சரிதான். ஏற்கனவே அ.வ.எண்.3/2000 ல் வழக்கு சொத்து வாதியின் இடம் என்பதால் வாதி அனுபவிப்பதை பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்ய கூடாது என தீர்ப்பு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் அது பொய் சாட்சியம் ஆகும். மேற்படி தீர்ப்பு பொய்யானது என்றால் தீர்ப்புரையின் பேரில் ஏன் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் அதில் நான் தரப்பினர் இல்லை. ஏற்கனவே நீதிமன்றத்தில் வாதிக்கு தீர்ப்பு உள்ள நிலையில் தீர்ப்பு தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் நான் இடைஞ்சல் செய்கிறேன் என்றால் நான் மட்டும் இல்லை. அந்த தெரு மக்கள் அனைவருமே சாட்சியம் அளிக்க தயாராக உள்ளோம்.

6. மனுதாரர் தவறான ஆவணம் அளித்திருப்பதாக எந்த ஆவணத்தை கூறுகிறோம் என்றால் வரைபட அனுமதியை கூறுகிறேன். வரைபட அனுமதியை

பெற்ற தேதியில் இருந்து உரிய காலத்திற்குள் அவர் கட்டிடம் கட்டவில்லை. அது சரியான இடம் இல்லை என்பதால்தான் அவர் கட்டுமானம் கட்டவில்லை. நான் தற்போது கூறியுள்ள விவரங்களை எனது எதிர்வழக்குரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் 8, 9 ஆவணங்கள் தவறான ஆவணங்கள் என்று கூறியிருப்பதில் அது தவறான ஆவணம் என்றால் ஆவணங்களை பார்த்தால்தான் தெரியும்.

7. வாதியின் தனிப்பட்ட இடத்தில் சாலை அமைத்தது தவறு என வா.சா.ஆ 8, 9 ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் இரவோடு இரவாக வாதி JCB ஆல் சாலையை அகற்றிவிட்டார். வாதியின் தனிப்பட்ட இடத்தில் சாலை அமைத்தது தவறு என வா.சா.ஆ 8, 9 ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது தவறு. வா.சா.ஆ 8, 9 தவறான என்பதை காட்ட நான் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யாமல் வா.சா.ஆ 8, 9 தவறான ஆவணங்கள் என்று எந்த அடிப்படையில் கூறுகிறேன் என்றால் எனக்கு தெரியாது. நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளதற்கு ஆதரவாக எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத நிலையில் நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல.

8. எனது தனிப்பட்ட சொத்தில் நான் என்ன செய்துள்ளேன் என்றால் வீடு, கார் நிறுத்தும் இடம், மற்றொரு மனையில் மற்றொரு வீடு கட்டியுள்ளேன். எனது கிரைய ஆவணத்தில் எனது பாதையை பற்றி சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். நான் அந்த கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் அவ்வாறு ஆவணம் தாக்கல் செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)